# மாங்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

**2022** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் **30**ம் தேதி வெள்ளிக்கிழமை காலை **10.00** மணிக்கு மாங்காடு நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்ற கூடத்தில் நடைபெறும் நகர் மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் விவரம்.

நகராட்சி அலுவலகம், | **நகர் மன்ற தலைவர்**
மாங்காடு | **மாங்காடு நகராட்சி.**
நாள்.**26.09.2022**

---

**குறள்: கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் ஆகஸ்ட்–**2022** மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஆகஸ்ட் **2022**–ம் மாதங்களுக்கான வரவுகள் மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மற்றும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

மாங்காடு பேரூராட்சியாக இருந்த போது தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை மாங்காடு ரகுநாதபுரம் ச.எண்.**49**ல் உள்ள சுடுகாடு பகுதியில் கடந்த **10** ஆண்டுகளுக்கு மேலாக கொட்டப்பட்டு வந்த நிலையில் ரகுநாதபுரம் மற்றம் சுற்றியுள்ள பகுதி மக்கள் மேற்படி சுடுகாட்டு பகுதியில் குப்பைகள் கொட்டக்கூடாது என போராட்டம் நடத்தியதை தொடர்ந்து மேற்படி ரகுநாதபுரம் பகுதியில் குப்பைகள் கொட்டப்படுவதில்லை. மேலும் இந்நிகழ்வினை தொடர்ந்து தினசரி சேகரமாகும் குப்பைகள் ராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள வளம்மீட்பு பூங்காவில் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி ராமகிருஷ்ணபுரம் வளம்மீட்பு பூங்காவில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பகுதியில் போதிய இடவசதி இல்லாததால் வின்ரோ அமைக்கப்பட்டு வரும் பகுதிகள் மற்றும் சுடுகாடு செல்லும் வழியில் கொட்டப்பட்டு வருகிறது. எனவே மேற்படி ரகுநாதபுரம் மற்றும் இராமகிருஷ்ணபுரம் பகுதிகளில் தேங்கியுள்ள குப்பைகளை உயிர் அகழ்வு முறையில் செய்ய உரிய கருத்துரு அனுப்ப நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.**19009/2022**/எஸ்.பி.எம்.–**1**

நாள்.**04.08.2022**ன்படி கோரியதை தொடர்ந்து அண்ணா பல்கலைகழகத்திற்கு Biomining for removeing Legacy waste (DPR) தயார் செய்ய கோரியதில் அண்ணா பல்கலைகழக பேராசிரியர் மற்றும் இயக்குநர் டாக்டர்.எஸ்.கண்மணி என்பவரின் கடித நாள்.**16.08.2022**ன்படி DPR Evaluation வழங்க கட்டணம் ரூ.**1,77,000/–** மேற்படி இரண்டு பகுதிகளில் உள்ள குப்பைகளை நேரில் ஆய்வு செய்து அளவீடு தயார் செய்த Gridline Survey and Geospatial Pvt. Ltd., நிறுவனத்திற்கு ரூ.**94,400/–** கட்டணம் பொதுநிதியில் வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தில் பகுதியில் மண் பரிசோதனை செய்ய இவ்வலுவலக கடிதம் நாள்.**12.05.2022**ன்படி அண்ணா பல்கலைகழக கிண்டி பொறியியல் கல்லூரி முதல்வருக்கு கடிதம்அனுப்பியதை தொடர்ந்து, மேற்படி பகுதியில் மண் பரிசோதனை செய்து முடிக்கப்பட்டு கிண்டி அண்ணா பல்கலைகழக பொறியியல் துறையிலிருந்து மண் பரிசோதனை செய்தமைக்கான அறிக்கை மற்றும் கட்டணம் ரூ.**4,29,225/–** வழங்க பட்டியல் வரப்பெற்றுள்ளது. மண் பரிசோதனைக்கான பட்டியலில் ஆய்வுக்கட்டணம் ரூ.**1,81,425/–** S.M.Associats என்ற பெயரிலும் ரூ.**2,47,800/–** இயக்குநர் CTDT (அண்ணா பல்கலை கழக பொறியியல் பிரிவு) என்ற பெயரிலும் மேற்படி இரு தொகைகளை நகராட்சி பொதுநிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சி அலுவலகத்திற்கு நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் தினசரி அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்கள் அமர்வதற்கு இருக்கைகள் (பிளாஸ்டிக் சேர்கள்) சப்ளை செய்யும் பணிக்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.**50/2022**/அ**1**, நாள்.**20.06.2022**ன்படி விலைப்புள்ளி கோரியதில் பின்வரும் விவரப்படி **28.06.2022** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ | விலைப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | விலை |
|---|---|---|---|---|
| **1** | மாங்காடு நகராட்சி அலுவலகத்திற்கு நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் தினசரி அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்கள் அமர்வதற்கு இருக்கைகள் (பிளாஸ்டிக் சேர்கள்) சப்ளை செய்தல் | **50**நெ | M/s.Royal Brunei<br>Porur, Chennai-116 | 55000/- |
| | | | Sri Sai Enterprises<br>Gerugambakkam, Chennai-122 | 62500/- |
| | | | Surya Furniture<br>Chennai. | 60000/- |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் Royal Brunei, போரூர், சென்னை—**116** நிறுவனத்திற்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டு சப்ளை உத்திரவு வழங்கியமைக்கும் பட்டியல் தொகை பொது நிதியில் வழங்கியமைக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.7**

மாங்காடு நகராட்சியில் நகர்மன்ற தலைவர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களின் அறைகளில் பொருத்தப்பட்டுள்ள CCTV கேமராக்களின் DVR பழுதானதால் CCTV கேமரா விடியோ பதிவாகாமல் உள்ளது இதில் மேற்படி அலுவலர்களின் அறைகளில் உள்ள மானிடரில் வீடியோ பதிவுகள் பார்க்க முடியாததால் CCTV கேமராவில் DVR புதியதாக மாற்ற அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர் R.S.எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் பட்டியல் தொகை பொது நிதியில் வழங்கியமைக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.8**

செங்கல்பட்டு மண்டலத்தில் தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள பரப்புரையாளர் மற்றும் மேற்பார்வையாளர்களை பணியமர்த்திக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேற்படி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.**2,28,525/—** முழுவதும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரின் உத்திரவின்படி மறைமலைநகர் நகராட்சி சார்பாக செலுத்தப்பட்டது. இதில் மாங்காடு நகராட்சிக்கு விளம்பர கட்டணம் ரூ.**12,770/—** என மறைமலைநகர் நகராட்சி ஆணையர் கடித ந.க.எண்.**1875/2022**/சி**1**, நாள்.**12.08.2022**ன்படி வங்கி கணக்கில் செலுத்த தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மாங்காடு நகராட்சிக்கு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் பணியமர்த்தி கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான கட்டணம் ரூ.**12,770/—**ஐ ஆணையர் மறைமலைநகர் நகராட்சிக்கு காசோலை வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.9**

மாங்காடு நகராட்சியில் வார்டு எண்.1 முதல் 27 வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வெளிக்கொணர்வு முறையில் (Outsourcing) 30 DBC பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய கிருபை மகளிர் சுய உதவி குழுவிற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு, நகர்மன்ற தீர்மான எண்.131 நாள்.18.07.2022ன்படி 01.08.2022 முதல் 30.09.2022 உடன் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. தற்போது வடகிழக்கு பருவ மழை ஆரம்பமாகியுள்ளதாலும், டெங்கு தடுப்பு நடவடிக்கை அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளிகள் கோர கால அவகாசம் கோரப்படுவதால் தற்போது 01.10.2022 முதல் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தமாகும் நாள் வரை மேற்படி நிறுவனத்தின் பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்து தரவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு பேரூராட்சி மன்ற தீர்மான எண்.511, நாள்.31.05.2021ன்படி பேரூராட்சிக்கு திருமதி. P.ரோசி மற்றும் திருமதி.கல்யாணி ஆகிய 2 நபர்கள் கணினி இயக்குதல் பணிக்கு ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் நிர்வாகம் மற்றும் திட்டப்பணிகளுக்கு ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. இதில் திருமதி.கல்யாணி என்பவர் 01.04.2022 முதல் பேரூராட்சி துறையில் பணிபுரிய விருப்பம் தெரிவித்துள்ளார். மேலும் ஓட்டுநர் பணிக்கு மினிலாரி TN20B 0500 இயக்குதல் திரு.N.பார்த்தசாரதி மற்றும் டிப்பர் டிராக்டர் TN22AV 4565 இயக்குதல் பணிகளுக்கு திரு.R.தமிழ்ச்செல்வன் ஆகிய இரண்டு ஒப்பந்த ஓட்டுநர்கள் தீர்மான எண்.512, நாள்.31.05.2021க்கும், 01.04.2021 முதல் 31.03.2022 வரையும், தீர்மான எண்.40ன்படி 01.04.2022 முதல் 30.06.2022 வரையும் தீர்மான எண்.88/நாள்.31.05.2022ன்படி 01.07.2022 முதல் 30.09.2022 வரையும் மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் விவரப்படியான நபர்களுக்கு ஒப்பதல் அளிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நிர்வாக காரணங்களினால் ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் தேவைப்படுவதால் மேற்படி பணிகளுக்கு 01.10.2022 முதல் 31.03.2023 வரை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரால் நிர்ணயிக்கப்பட்ட விலைவிகிதத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் தற்போது பணிபுரிந்து வரும் பின்வரும் விவரப்படியான நபர்களை ஈடுபடுத்தி கொள்ள மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த பணியாளர்கள் விவரம் |
|---|---|
| 1 | திருமதி. P.ரோசி, |
| 2 | திரு.N.பார்த்தசாரதி |
| 3 | திரு.R.தமிழ்ச்செல்வன் |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.11**

நகராட்சிகள் நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.10931–4/2022/எம்3 நாள்.28.04.2022ன்படி மாங்காடு நகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு Bolero ஈப்பு வாகனம் வாங்கிகொள்ள அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் பட்டியல்படி (GEM Rate) ரூ.9,18,373/– பொதுநியிதியில் வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.12**

நகர்புற உள்ளாட்சி தேர்தல் 2022 மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளுக்கு நகர்மன்ற தேர்தலில் அமைக்கப்பட்ட 44 வாக்குச்சாவடி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்திரவின்படி மையங்களுக்கு வெப்கேமரா Chip பொருத்தியது, 28 மையங்களில் CCTV கேமரா பொருத்தியது மற்றும் 16 மையங்களில் Web-Streeming கேமரா பொருத்தியது ஆகிய பணிகள் மேற்கொண்டமைக்கு I-Net Secure Labs Pvt. Ltd. என்ற நிறுவனத்திற்கு ரூ.4,15,677/– பொது நிதியில் வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.13**

நகராட்சிகள் நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.10931–4/2022/எம்3 நாள்.28.04.2022ன்படி மாங்காடு நகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு Bolero ஈப்பு வாகனத்திற்கு வட்டார போக்குவரத்து அலுவலரிடம் பதிவு சான்று பெற வாகன காப்பீடு கட்டணம் ரூ.43,490/– THE NEW INDIA ASSURANCE COMPANY LIMITED நிறுனத்திற்கு பொதுநிதியில் செலுத்தியமைக்கும் மற்றும் Bolero ஈப்பு வாகனத்திற்கு பதிவு சான்று பெற குன்றத்தூர் வட்டார போக்குவரத்து

அலுவலகத்தில் கோரப்படும் பதிவு கட்டணத்தை பொது நிதியில் செலுத்தவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.14**

மாங்காடு நகராட்சியில் **2021–2022**ஆம் ஆண்டுகளில் வழங்கிய பட்டியல் தொகையில் பிடித்தம் செய்த வருமானவரி மற்றும் சரக்கு மற்றும் சேவைவரி தொகையினை உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தி வருமானவரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் பணிக்கு Wer4u Accouting Services நிறுவனத்திற்கு ரூ.**19,360/–** வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.15**

மாங்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் முதற்கட்ட சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் **6** BOV வாகனங்களை பழுதுநீக்கம் செய்ய நகர்மன்ற தீர்மான எண்.**75**/நாள்.**31.05.2022**ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து, முதற்கட்டமாக **3** வாகனங்கள் பழுதுநீக்கம் செய்து பட்டியல் தொகை வழங்கப்பட்டது. மீதமுள்ள பழுதடைந்த **3** BOV வாகனங்களை பழுதுநீக்கம் செய்ய விலைப்புள்ளி கோரியமைக்கும் செலவினத்தை பொது நிதியல் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.16**

மாங்காடு நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் **2021–2022**ன் கீழ் நவீன எரிவாயு தகனமேடை அமைக்க ரூ.**136.00**லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மாங்காடு நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.**276/1**ல் அமைந்துள்ள சுடுகாடு பகுதியில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்க உள்ள இடத்தில் புதியதாக மும்முனை மின் இணைப்பு வழங்க மின்சார வாரியத்திடமிருந்து வரப்பெற்ற கட்டணம் ரூ.**18,236/–** பொதுநிதியில் செலுத்தியமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.17**

மாங்காடு நகராட்சியில் **23** மற்றும் **27**வது வார்டுகளில் புதிய தெருவிளக்கு மின் கம்பங்கள் அமைக்க நகர்மன்ற தீர்மான எண்.**108**, நாள்–**18.07.2022**ன்படி **47** புதிய மின் கம்பங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக

ந.க.எண்.157/2021/அ1, நாள்.27.08.2022ன்படி மதிப்பீடு தொகை வழங்க கோரியதில் மாங்காடு மின்சாரவாரிய உதவி பொறியாளரிடமிருந்து வரப்பெற்ற கட்டணம் ரூ.21,550/– பொதுநிதியில் செலுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.18**

மாங்காடு நகராட்சியில் 2022–2023ம் ஆண்டிற்கு புதியதாக பின்வரும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்ய கோரியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

1. திருமதி.ருக்மணி, சென்னை–109.
2. திரு.வேலு, திருவள்ளூர் மாவட்டம்.
3. திருவாளர் ஸ்ரீ செல்லியம்மன் & கோ, சென்னை–107.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.19**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் விவரப்படி பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற வார்டு உறுப்பினர்கள் அளித்துள்ள கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டுஎண் | வேலையின் பெயர் |
|---|---|
| 3 | கணபதி நகர் பகுதியில் 4 புதிய குடிநீர் குழாய்கள் அமைத்தல். சக்தி நகர் மெயின் ரோடு பகுதியில் 3 புதிய குழாய்கள் அமைத்தல். |
| 5 | 5வது வார்டுக்குட்பட்ட பத்ரிமேடு, சிடிஏ கார்டன், திருமாநகர், சாந்தி நகர் காமாட்சி நகர், ஜீவா நகர், ஜீவா நகர் மற்றும் உருது பள்ளி எதிரில் 30 மின் கம்பங்கள் அமைத்தல். 5வது வார்டு பகுதியில் நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல். |
| 7 | வசந்தபுரம் மெயின் ரோடு, சுதா நகர், மாருதி என்கிளேவ், ஸ்டேப் ஸ்டோன் சாலை ஆகிய பகுதிகளில் 17 மின்கம்பங்கள் புதியதாக அமைத்தல். மாருதி என்கிளேவ், ஸ்டெப் ஸ்டோன் சாலை பகுதிகளில் குடிநீர் பைப்லைன் அமைத்தல். |
| 10 | ஸ்ரீசக்ரா நகர் பகுதியில் 5 மின்கம்பங்கள் மற்றும் மின்விளக்கு அமைத்தல் . |
| 11 | ஓம் சக்தி நகர் 3வது மெயின் ரோடு சாலை சீரமைத்தல். 4வது குறுக்கு தெருவில் 2 மின்பங்களும் 6வது குறுக்கு தெருவில் 1 மின்கம்பமும் அமைத்தல். |
| 17 | ஸ்ரீ கணபதி நகர், காமாட்சி சிட்டி, திருமா நகர் மற்றும் அஸ்டலட்சுமி நகர் பகுதிகளில் புதியதாக குடிநீர் பைப்லைன் அமைத்தல். |
| 21 | பாலமுருகன் நகர் 1வது மற்றும் 2வது தெருவில் மின் கம்பங்கள் அமைத்தல், 2வது குறுக்கு தெருவில் 2 மின்பங்கள் அமைத்தல். சபரி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல். |
| 22 | பாலாண்டீஸ்வரன் கோயில் தெருவில் மழைநீர் வடிகால் மூடி அமைத்தல். மாந்தியம்மன் கோயில் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் தார்சாலை அமைத்தல் பணி. |
| 23 | கே.கே.நகர் மற்றும் மேல் தெரு பகுதிகளில் கிணற்று உறை அமைத்தல். கே.கே.நகர் பகுதியில் சமுதாயகூடம் புதுபித்தல், கே.கே.நகர் சுடுகாடு சுற்று சுவர் அமைத்தல், கிருஸ்துவ கல்லறை சுடுகாடு அமைத்தல். 23வது வார்டுக்குட்பட்ட இடத்தில் புதிய ரேசன் கடை அமைத்தல். பட்டுகூட்ரோடு, கே.கே.நகர்.பகுதியில் 2 பஸ் ஸ்டாண்டு அமைத்து தரவும். CSI பள்ளி தெரு மற்றும் காமாட்சி நகரில் 5 புதிய மின்கம்பங்கள் அமைத்தல். |
| 24 | 24வது வார்டு பகுதியில் உள்ள 10 மின்கம்பங்களை மாற்றி அமைத்தல். தெற்கு காமாட்சி நகர் முழுவதும் மழைநீர் வடிகால் அமைத்தல். தெற்கு காமாட்சி நகர் சர்வே |

| | |
|---|---|
| | எண்.386/1ல் பொதுவிநியோக கட்டடம் கட்டுதல். |
| 25 | வாலாஜா தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் பணி |

**அலுவலகக் குறிப்பு :–** நகராட்சி நிதி நிலைமைக்கு ஏற்ப பொதுநிதியிலிருந்தோ, அரசு நிதியிலிருந்தோ அல்லது ஏதேனும் ஒரு திட்ட நிதிப்பெற்றோ பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.20**

மாங்காடு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் பின்வரும் விவரப்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தின்படி, கொசு புழு ஒழிப்பு மருந்துகள் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மருந்து கட்டுப்பாடு கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட, **M/S.AMIGOS ENTERPRISES** நிறுவனத்திடமிருந்து பொது சுகாதாரம் அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று கொள்முதல் செய்தமைக்கும் பட்டியல் தொகை பொது நிதியில் வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

1. பைரத்திரம் (Pyrethrum) 2% Extract – 150லிட்டர்.
2. டெமிபாஸ் (Temephos 50% EC) – 60லிட்டர்.
3. B.T.I. - 100Kg

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சியில் மாங்காடு பிரதான சாலை முதல் சண்முகானந்தா சாமி கோயில் தெரு வரையிலுள்ள பிரதான குடிநீர் பைப்லைன் முற்றிலும் பழுதடைவதால் மேற்படி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி தெருவில் புதியதாக ரூ.8.60லட்சம் மதிப்பீட்டில் 490மீட்டர் நீளத்தில் புதியதாக குடிநீர் பைப்லைன் அமைக்க நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.22**

மாங்காடு நகராட்சியில் சண்முகானந்தா சாமி கோயில் தெரு முதல் மேல்ரகுநாதபுரம் வரையிலுள்ள பிரதான குடிநீர் பைப்லைன் முற்றிலும் பழுதடைவதால் மேற்படி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் வழங்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி தெருவில் புதியதாக சண்முகானந்தா சாமி கோயில் தெரு முதல் மேல்ரகுநாதபுரம் வரை ரூ.7.00லட்சம்

மதிப்பீட்டில் 400மீட்டர் நீளத்தில் புதியதாக குடிநீர் பைப்லைன் அமைக்க நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.23**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந.க.எண்.10383/2021/ மாகி2, நாள்.27.06.2022 கடிதத்தின் வழிகாட்டுதலின்படி எதிர்வரும் பருவமழை முன்னிட்டு பொது மக்கள் பாதிக்காமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முதற்கட்டமாக இந்நகராட்சிக்குட்பட்ட 3,4,10,11,13,17,19,22,25 மற்றும் 26 வார்டுகளில் உள்ள அனைத்து கல்வெர்ட்கள், சிறுபாலங்கள், வடிகால்களில் உள்ள கசடுகளை அடிப்புறத்துடன் 100சதவீதம் தூர்வாரி தூய்மை பணியினை மேற்கொள்ளப்பட்டது. மீதமுள்ள 1,2,5,6,7,8,9,12,14,15,16,18,20,21,23,24 மற்றும் 27 வார்டுகளில் ரூ.9.60 லட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

வடகிழக்கு பருவமழை வெள்ள தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்பதால் ரூ.9.60 லட்சம் மதிப்பீட்டில் பணிமேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.24**

அரசாணை எண். 122 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 8.12.2021ன் படி பேரூராட்சியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக மாங்காடு நகராட்சி தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சியில் மொத்தம் 27 வார்டு பகுதிகள் உள்ளது. அவற்றில் சுமார் 10159 எண்ணிக்கையிலான குடியிருப்புகள் அமைந்துள்ளது. 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்நகரில் 38180 மக்கள் தொகை கொண்டுள்ளது. தற்போது சுமார் 54000 கொண்டுள்ளது. இந்நகராட்சியில் நாளொன்றுக்கு சுமார் 12.00 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்படும் திடக்கழிவுகள் தனியாக உரக்கிடங்கு ஏதும் இல்லாததால் வார்டு எண்.17ல் அமைந்துள்ள பூங்கா பகுதியில் கொண்டு சேர்க்கப்படுகிறது. மேலும் அப்பகுதியில் மக்கும் தன்மையுள்ள திடக்கழிவுகளை உரமாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி இடத்தில் சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகள் தோராயமாக சுமார் 800.00 மெட்ரிக் டன் அளவில் உள்ளது. இக்கழிவுகளால் துர்நாற்றம் வீசுவதால் மாசு ஏற்பட்டு தொற்று நோய் பரவுவதற்கும் வாய்ப்பாக அமைந்துள்ளது. மேலும் இக்கழிவுகளை உடனடியாக அகற்றி சுத்தம் செய்ய அப்பகுதிவாழ் பொது மக்கள் நேரிடையாக கோரி வருகின்றனர். தற்போதுள்ள நகராட்சியில் உள்ள வாகன தளவாடங்களை கொண்டு இவற்றினை உடனடியாக அகற்றி

சுத்தம் செய்ய இயலாத சூழ்நிலை அமைந்துள்ளது. மேலும் தற்போதைய கொரோனா பெருந்தொற்று காலத்தில் குப்பைகளை தேங்க விடாமல் தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், நகரில் தேங்கியுள்ள கழிவுகளை கனரக டிப்பர் லாரிகள் கொண்டு (வாடகை, டிரைவர் பேட்டா, டீசல், ஆயில், ஏற்றுக்கூலி மற்றும் இதர செலவினங்கள் உட்பட) நாள் வாடகை அடிப்படையில் பயன்படுத்தி அகற்றப்பட்டு வருகிறது. இப்பொருள் தொடர்பாக நகர் மன்ற தீர்மானம் எண்.127, நாள்.18.07.2022ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகரில் மேலும் குப்பைகளை தேங்க விடாமலும், தொற்று நோய் பரவுவதை தடுக்கும் விதமாகவும், நாளொன்றுக்கு தோராயமாக 40 மெட்ரிக் டன் கழிவுகளை அகற்றிட வேண்டியது அவசியம் என்பதால், இப்பணிகளை ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த காலதாமதம் ஏற்பட்டு குப்பைகள் தேக்கம் அடைந்து நோய் தொற்று ஏற்படாமல் இருக்க பொது மக்களின் நலன் கருதியும் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கும் சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு பொது நிதியில் பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சி 27 வார்டுகளில் ஏற்கனவே பெய்த மழையின் காரணமாக சாலைகள் பழுதடைந்துள்ளது. இதனால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளது. இவ்வாறான சாலைகளை தற்காலிகமாக சீர்செய்யவும் மற்றும் செப்பனிடவும் இதற்கான மதிப்பீடு தயாரிக்கவும் இப்பணிகளுக்கான செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.26**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள இறைச்சி கடைகளில் சேகரமாகும் கழிவுகளை இரவு நேரங்களில் சாலைகளில் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுவதால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. இறைச்சி கழிவுகளை சாலை ஓரங்களில் கொட்டும் நபர்களை கண்டறிந்து பொது சுகாதார சட்ட பிரிவுகளின் கீழ் நோட்டீஸ் வழங்கி நடவடிக்கை மேற்கொண்டு அபராதம் விதிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.27**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட மேல்ரகுநாதபுரம் பகுதியில் புதியதாக கால்நடை துறையால் கால்நடை மருத்துவமனை கட்டப்பட்டு இயங்கவுள்ளதால், பாலாண்டீஸ்வரன் கோயில் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் தற்போது வரை இயங்கி வரும்

கால்நடை மருத்துவமனையினை மேற்படி மேல்ரகுநாதபுரம் மேற்படி இடத்தில் மாற்ற செய்ய உள்ளதால் இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய கட்டிடத்தினை இடித்து அகற்றி இவ்விடத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி / அரசு நிதி / பிற நிதியின் கீழ் பொது விநியோக கடைகள் கட்டுவதற்கும், மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்மந்தப்பட்ட துறை உயர் அலுவலருக்கு கருத்துரு அனுப்பி பணி மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.28**

மாங்காடு நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் 2022-23-ன்கீழ் Tied Grant தொகை ரூ.69.00 இலட்சம் மற்றும் Un-Tied Grantதொகை ரூ.46.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.115.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமைக்கு கீழ்காணும் விவரப்படி பணிகள் தேர்வு செய்யப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| Tied Grant - 50% குடிநீர்திட்டபணிகள் | | |
| 1 | வார்டு எண்.18 ஹரி அவென்யூ மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 23.00 |
| 2 | வார்டு எண்.5 பத்ரிமேடு ஜீவா நகர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வளாகத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 13.00 |
| Tied Grant - 50% திடக்கழிவுமேலாண்மைதிட்டபணிகள் | | |
| 3 | வார்டு எண்..17 ராமகிருஷ்ணாபுரம் திடக்கழிவு வளாகம் எதிரில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 34.50 |
| Un-Tied Grant | | |
| 4 | வார்டு எண்..1 திருவள்ளுவர்சிட்டி பேஸ் 1 புத்துக்கோயில் முதல் சக்தி நகர் வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 46.00 |
| | **மொத்தம்** | **116.50** |

மேற்காணும் விவரப்படியான பணிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.116.50 இலட்சத்தில் திட்ட நிதி ஒதுக்கீடு ரூ.115.00 இலட்சம் போக மீதமுள்ள ரூ.1.50 இலட்சம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளப்படும்.

எனவே மேற்படி பணிகளை 15வது நிதிக்குழு மான்யம் 2022-23 (Tied & Un-Tied Grant) கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்றத்தின் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டதற்கும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.29**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு–9 மாங்காடு பிரதான சாலையில் சர்வே புல எண்.138–ல் பொது மக்களின் பயன்பாட்டிற்க்கும் பொது நூலகம் மற்றும் திறன் சார்ந்த அறிவுசார் மையம் KNMT திட்டத்தின் கீழ் புதியதாக கட்ட தக்க மதிப்பீடுகள் தயாரித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.30**

வடகிழக்கு பருவ மழையினால் மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்டுள்ள பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து பொது மக்கள் பாதிக்காத வன்னம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்பதால் வார்டு – 9 எம்.ஜி.ஆர் நகர் பின்புறமுள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கால்வாய் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மேற்படி கால்வாயினை தூர்வாரி சுத்தப்படுத்தி தருமாறு கேட்டுக்கொண்டு பொதுப்பணித்துறைக்கு கடிதம் அனுப்பவும், மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.31**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் பைப்லைன் அமைத்து அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | நீளம் மீட்டரில் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.14 சீனிவாசா நகர் முதல் விசாலாட்சி நகர் வரை குடிநீர் பைப்லைன் அமைத்தல் | 540மீ | 2,50,000/– |
| 2 | வார்டு எண்.3 கணபதி நகர் பகுதியில் குடிநீர் பைப்லைன் அமைத்தல் | 165மீ | 1,00,000/– |
| 3 | வார்டு எண்.18ல் சீனிவாசா நகர் பகுதியில் குடிநீர் பைப்லைன் அமைத்தல் | 220மீ | 1,20,000/– |
| 4 | வார்டு எண்.8 வசந்தபுரம் பகுதியில் குடிநீர் பைப்லைன் அமைத்தல் | 850மீ | 4,00,000/– |
| 5 | வார்டு எண்.18 முத்துசாமி அவென்யூ குடிநீர் பைப்லைன் அமைத்தல் | 220மீ | 1,00,000/– |
| 6 | வார்டு எண்.11 வைகுண்ட பெருமாள் நகர், 4வது குறுக்கு தெரு குடிநீர் பைப்லைன் அமைத்தல் | 220மீ | 1,00,000/– |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.32**

மாங்காடு நகராட்சி ‘ஆ’ கிராமம் சர்வே எண்.**479/5** மற்றும் **478/3A2** எண்ணில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் அவர்களின் கடித எண்.Layout-1/0082/2022, நாள்.**10.08.2022**ன்படி சர்வே எண்.**479/5** மற்றும் **478/3A2**ல் **15** மனைகள் அங்கீகரித்து தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் **446**சதுர மீட்டர் அளவில் சாலைகளுக்கு தானப்பத்திரம் (Gift deed) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. பொது பயன்பாட்டிற்கு **9** சதுர மீட்டர் மற்றும் மின்சார வாரியத்திற்கு **9** சதுர மீட்டர் அளவுகளில் தானப்பத்திரம் **15957/2022**, நாள்.**30.07.2022**ன்படி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு தேவையான சாலை, தெருவிளக்கு, வடிகால் மற்றும் குடிநீர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த நகராட்சி பொறியாளர் மூலம் தல ஆய்வு மேற்கொண்டு மதிப்பீடு தயாரிக்க இவ்வலுவலக குறிப்பு எண்.**684/2022/அ1**, நாள்.**18.08.2022**ன்படி கோரப்பட்டது. மேற்படி மனைப்பிரிவு உரிமையாளரின் **09.09.2022** நாளிட்ட கடிதத்தில் சாலை மற்றும் தெரு விளக்குகள் தாங்களாகவே அமைத்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நகராட்சி பொறியாளர் மதிப்பீட்டில் சுட்டிக்காட்டப்பட்ட கட்டணங்களையும் மாங்காடு நகராட்சி துணை விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கான சென்டேஜ் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களையும், வசூலித்து மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.32**

மாங்காடு நகராட்சி ‘ஆ’